செ.வெ.எண்: 275 நாள்: 05.05.2025

# புதுக்கோட்டை மாவட்டம்

## அரசு இசைப்பள்ளியில் சேர்வதற்கு மாணாக்கர்கள் விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப்பள்ளியில் சேர மாணவ/ மாணவியர் விண்ணப்பிக்கலாம்.

அரசு இசைப்பள்ளியில் நிகழ்வாண்டுக்கான இருபாலர் மாணவர் சேர்க்கை தற்போது நடைபெற்று வருகிறது. இதில் குரலிசை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பிக்க 7-ஆம் வகுப்பு தேர்ச்சியும், நாதசுரம், தவில், தேவாரம் ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பிக்க எழுதப் படிக்கத் தெரிந்திருக்கவும் வேண்டும். 12 வயது முதல் 25 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். பயிற்சிக்காலம் 3 ஆண்டுகள். பயிற்சி நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை. பயிற்சிக் கட்டணம் ரூ.350/- ஆகும்.

அரசு சான்றிதழ் படிப்பான இப்பயிற்சியில் அரசுத் துறையில் வேலை வாய்ப்புகளும், வானொலி, தொலைக்காட்சி மற்றும் திரைப்படங்களில் நிகழ்ச்சி வழங்க வாய்ப்புகளும் மற்றும் இலவசப் பேருந்து சலுகை, தங்கும் வசதி மற்றும் கல்வி உதவித் தொகை அரசு விதிகளுக்குட்பட்டு வழங்கப்படும். மாணவர்கள் அனைவருக்கும் ஊக்கத் தொகையாக மாதந்தோறும் ரூ.400/- வழங்கப்படும்.

எனவே, மே 2-ம் தேதி முதல் மாணவர் சேர்க்கை தொடங்குகிறது. ஆர்வமுள்ள மாணவ/ மாணவியர் மாவட்ட அரசு இசைப்பள்ளி புல எண்.29/70, லட்சுமி நகர் நரிமேடு, சமத்துவபுரம் வழி, புதுக்கோட்டை - 622005 என்ற முகவரியில் தலைமை ஆசிரியரை நேரில் அனுகவும். மேலும் விபரங்களுக்கு 04322-225575, 9500388896 என்ற தொலைபேசி எண்ணினை தொடர்பு கொள்ளவும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai